# அனைத்தையும் அறியும் அறிவு!



ப்ரக்ஞன்

# அனைத்தையும் அறியும் அறிவு

ஆசிரியர்

ப்ரக்ருன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | அனைத்தையும் அறியும் அறிவு |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வெளியீடு** | : | பராபரம் பாடசாலை |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2025 |
| **பக்கங்கள்** | : | 30 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# அனைத்தையும் அறியும் அறிவு

அறிவு என்பது படைக்கப்பட்ட உயிரினங்களின் இன்றியமையாத இயல்பு. அத்தகைய அறிவு நிலைகள் படைக்கப்பட்ட உயிரினங்களின் பல்வேறு உடல் அமைப்புகளின் மூலம், அவைகளின் அறிவு வெளிப்படும்போது, ஜடப்பொருட்களுக்கு அப்பாற்பட்டு, அது தாவரங்களில் ஒரு அறிவு எனத் தொடங்கி, மனிதனில் ஆறு அறிவு எனும் வரை, பல்வேறு பரிமாணங்களில் அறிவு பரிணாம வளர்ச்சி அடைகின்றதை நம்மால் பார்க்க முடிகின்றது.

ஆகவே, அறிவு என்பது ஒரு மனிதனின் மிக முக்கியமான ஆற்றல்களில் ஒன்றாகும். அறிவு மூலமாகவே ஒரு மனிதன் உலகைப் புரிந்து கொள்ளவும், அதில் வெற்றிபெறவும் முடியும்.

சரி! **அனைத்தையும் அறியும் அறிவு** என்பது என்ன?

அதை எப்படிப் பெறலாம்?

இங்கு, அறிவு என்பது இறைவனின் அம்சமாகும். அதை முதலில் புரிந்துக் கொள்ள வேண்டும். இறைவன் எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன். அதுப்போலவே, ஒரு மனிதன் தனக்குள் உள்ள அறிவை வளர்த்துக் கொண்டால், அவன் இறைவனின் அம்சத்தை அடைய முடியும்.

எண்ணங்களால் எழுந்த அறிவு மனதிலிருந்து உருவாகிறது

மனம் என்பது அறிவின் இருப்பிடமாகும். மனம் என்பது எண்ணங்களின் தொகுப்பு. அது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களுக்கு ஏற்றவாறு, பல்வேறு அலை வரிசைகளில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். அந்த அலையின் தன்மைகளை அடக்கிக் கொண்டே போனால், அது இறுதியில் ஒரு நிலையான **அமைதி** நிலைக்கு உயர்கின்றது.

அந்த அமைதி நிலைதான் தூய அறிவாகும். படைக்கப்பட்ட அணுவிலிருந்து பிரம்மம் வரை எல்லாம் அறிவு மயம்.

ஆக, அறிதல் அல்லது அறிவு என்பது அணுவிலிருந்து பிரம்மம் வரை எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளது. ஒவ்வொரு உயிரினத்தின் உள்ளே அவைகள் இயங்க வேண்டுமானால், அதற்கான அறிவுதான் அதன் உயிரில் **மையம்** கொண்டுள்ளது.

அந்த அறிவை எந்த உயிரினம் உணர முடியும் என்றால், அது மனித இனம் மட்டுமே. ஆம், மனிதனிடம் மட்டுமே மனம் மேம்பட்டு, புத்தி சக்தியாக பரிணமிக்கின்றது. மனம் அலைந்து கொண்டே இருந்தால், அது உலகின் பொருட்களில் ஈடுபட்டு, அதன் உணர்ச்சிகளில் சிக்கிக் கொள்ளும். ஆனால், மனதை உள்ளே திருப்பி, அதன் மையத்தில் உள்ள அறிவை உணர்ந்தால், அவன் எல்லாம் அறிந்தவனாக மாறிவிடுவான்.

அதிலே **அனைத்தையும் அறியும் அறிவு** என்பது ஒரு மனிதனின் மிக உயர்ந்த இலக்குகளில் ஒன்றாகும். அந்த இலக்கை அடைய மனிதன் தன் அகத்தை உள்ளே திரும்பி  பார்க்க வேண்டும். புற நாட்டங்களை குறைத்துக் கொண்டு, அக நாட்டங்களை நாட வேண்டும்.

அவ்வாறு, மனதை உள்ளே திருப்பி, அதன் மையத்தில் உள்ள அறிவை உணர்ந்தால், அவன் எல்லாம் அறிந்தவனாக மாறிவிடுவான்.

அறிவு என்பது இறைவனின் அம்சமாகும். மனம் என்பது அறிவின் இருப்பிடமாகும்.

அந்த வகையிலே,

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே

நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே
ஆறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" – தொல்காப்பியம்.

இதையெல்லாம் தாண்டி இந்த அறிவைப் பத்தாக வகைப்படுத்துகிறார் திருமூலர்.

உற்றறிவு ஐந்தும், உணர்ந்தறிவு ஆறு ஏழும்
கற்றறிவு எட்டும் கலந்தறிவு ஒன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்றறியாது அழிகின்ற வாறே. – திருமந்திரம்.

ஐந்தறிவு நிலையிலேயே குறைபாடு உடைய மனிதர்களுக்கு ஆறாவது அறிவு எப்படி வேலை செய்யும்? பிறகு எப்படி அவர்கள் ஆறாவது அறிவை நம்புவார்கள்? மனதை மனதால் வசப்படுத்த வேண்டும். அசுத்த மாயையை சுத்த மாயையால் தூய்மைப்படுத்த வேண்டும். அதுப்போல **அறிவை அறிவால்தான் அறிய வேண்டும்**, அறிய முடியும்.

ஆக, ஐம்புலன்களில் ஐம்பொறிகள் பொருந்தி, அறிந்து கொள்வது ஐந்தறிவு ஆகும். அந்த ஐந்தறிவை அவைகளினின்று வேறாக இருந்து அறிந்து கொள்வது ஆறாவது அறிவு. பொருட்களின் நன்மை, தீமைகளை ஆராயும் அறிவு ஏழாவது அறிவாகிய பகுத்தறிவு. இந்த ஆறும் ஏழும் அனுபவங்களின் உணர்வுகளின் மூலம் பெற்ற தெளிவால் ஏற்படுவது.

எனவேதான் அவற்றை "**உணர்ந்தறிவு ஆறு ஏழும்**" என்றார்.

இனி கல்வியால் பெறுவது எட்டாவது அறிவு. அந்த அனுபவத்தால் பெறுவது ஒன்பதாவது அறிவு.

இந்த ஒன்பது அறிவுக்கும் காரணமானவர் **சிவம் – சக்தி** என அறிந்துக் கொள்வது **பதிஞானம்** எனப்படும் பத்தாவது அறிவு.

ஐந்து புலன்களின் மூலமாக அறிந்து, உணர்ந்து, தெளிந்து பெறும் அறிவே ஆறாம் அறிவு. அந்த ஆறாம் அறிவின் மூலமாகவே ஆன்மாவை நோக்கி அல்லது மற்ற உண்மைகளை நோக்கி நாம் பயணப்படுகிறோம். அறிவை அறிவால் அறிவதே தன்னுணர்வு எனப்பட்டுள்ளது. சிற்றறிவு எனும் ஐம்புலன்கள் மூலம் பெற்ற அறிவால் தெளிந்து, தெளிந்த நிலையில் உள்ள அறிவால் பேரறிவை அறிய முற்பட வேண்டும். இப்படித் தெளிந்த நிலையில் உள்ள அறிவே பகுத்தறிவு. அதுவே நன்மை, தீமைகளை பகுத்து உணரும்.

உதாரணமாக ஒரு குழந்தைக்கு இந்த பகுத்தறிவு வேலை செய்யாது. ஏனென்றால் அது இன்னும் ஐந்து அறிவின் மூலமாகத் தெளிவை அடைய வில்லை. எனவே அதற்கு நன்மை, தீமை தெரியாது.

வளர வளர தன் அறிவை வளர்த்துக் கொள்கிறது. எனவே அனுபவத்தால் தெளிவு பெற்ற அறிவு ஆறாம் அறிவு.

**அறிவே கடவுள்** என்கின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி
அலையும் அறிவிலிகாள் பல –
ஆயிரம் வேதம், அறிவு ஒன்றே தெய்வம் உண்டாம்
எனல் கேளீரோ!

மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள் எதனூடும் –
நின்று ஓங்கும் அறிவு ஒன்றே தெய்வம் என்று
ஓதி அறியீரோ?

சுத்த அறிவே சிவம் என்று கூறும்
சுருதிகள் கேளீரோ? – பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
பெருமை அழிவீரோ? – மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

ஆகவே, அந்தப் பேரறிவை நம்மிடம் உள்ள மனம் என்ற கருவியின் உதவியால், புத்தி சக்தியைக் கொண்ட அறிவால்தான் நம்முள் உணர முடியும்.

அப்படி அறியத் துடிக்கும் விவேகமுடைய தெளிந்த அறிவே பகுத்தறிவு.

எந்த வித கருவிக்கரணங்களின் துணையுமின்றி எது தன்னைத் தானே உணர்கிறதோ? அதுவே ஆத்மா.

அதை ஆத்ம சைதன்யம், சித், ப்ரக்ஞானம், பேரறிவு, ப்ரக்ஞை என்றெல்லாம் சொல்லிப் போற்றுவார்கள்.

அந்த ஆத்மாவின் பேரொளியைப் பெற்று பிரகாசிக்கும் புத்தியின் ஒரு பகுதிதான் நம்முடைய ஆறாம் அறிவு.

மற்ற உயிரினங்கள் இதுப்போன்ற வார்த்தைகள் அல்லது சொற்களின் மூலம் தன் அறிவை விருத்தி செய்துக் கொள்ள முடியாது. அவைகள் தங்கள் ஐந்து புலன் நுகர்ச்சியின் மூலம் உணவிற்காகவும், உறைவிடத்திற்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும், தன்னை தற்காத்துக் கொள்வதற்காகவும் மட்டுமே அறிவை விருத்தி செய்து கொள்ளும்.

அதைத் தாண்டி அவற்றின் அறிவு போகாது. போகவும் முடியாது. எனவேதான் அவைகளை ஐந்தறிவு ஜீவன்கள் என்று சொல்கிறார்கள்.

மனிதன் தன் ஐந்து புலன்கள் மூலம் பெறும் ஐந்து அறிவையும் தாண்டி, சொல்லின் உதவியோடு தன் அறிவை விரிவுபடுத்தி பகுத்தறியும் திறனைப் பெற்றுக் கொள்கிறான்.

இதுவே, **ஆறாம் அறிவு**.

விரிவுபடுத்தி என்றால், ஐந்து புலன்களின் நுகர்ச்சியால் ஜட நிலையில் திகழும் மனதை, விரிவுபடுத்தி சூக்கும நிலைக்கு உயர்த்துவது.

ஆன்ம நிலைக்குச் சென்றுவிட்ட பிறகு, அங்கே அறிதலுமில்லை, உணர்தலுமில்லை.

ஆன்மீக வாழ்விலும் சரி, பிரபஞ்ச வாழ்விலும் சரி இந்தத் தெளிந்த அறிவாகிய ஆறாம் அறிவே வெற்றியை ஈட்டித் தரும். மேலும், திருமந்திரம் இன்னொரு பாடலில் இந்த அறிவைப் பற்றி விளக்குகின்றது.

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே. – திருமந்திரம் – 2551.

எல்லாம் அறியும் அறிவை கவனிக்காமல் விட்டு, விட்டு, இந்த உலகத்தில் இருக்கின்ற மற்றவைகளை எல்லாம் அறிந்துக் கொள்வதினால், இங்கு ஒரு இலாபமும் இல்லை. ஆகவே, '**அனைத்தையும் அறிகின்ற அறிவு**' ஒன்று உண்டு, அந்த அறிவு மட்டும்தான் "**நான்**", "**நான்**" என்று நம்முள் எப்போதும் ஸ்புரணம் ஆகிக்கொண்டிருக்கின்றது.

அந்த அறிவை நாம் நம்முள் உணர்ந்துக் கொண்ட மறுவிநாடி எல்லாம் அறிந்த அந்த இறைவனாகவே நாம் ஆகிவிடுகின்றோம் என்கின்றார் திருமூலர் பெருமான்.

ஆனால், நாம் புற அறிவுகளை ஏற்றி வைத்துக் கொண்டு, அவைகளைத்தான் உன்மையான அறிவு என்பதாக நினைத்துக் கொண்டு இருக்கின்றோம். அதே சமயம், அவ்வாறு நாம் புறத்திலே அறிகின்ற அத்தனை புற விசய, சுகங்களுக்கும் ஆதாரமாக அந்த தூய அறிவு அகத்திலே

இருப்பதினால் மட்டும்தான் இங்கு அனைத்தையும் அறிய முடிகின்றது என்ற அறிவு ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும்.

இந்த அக அறிவை அறியாதவன் அறியாமையில் இருப்பவன் என்கின்றது சாஸ்திரம்.

ஆகவே, மனிதன் புற அறிவுகளாக அறிகின்ற அனைத்து அறிவியல் துறைகளில் விஞ்ஞானத்தில் மனிதன் புரிந்துள்ள சாதனைகள் அவனிடம் கொடுக்கப்பட்ட பகுத்தறிவின் வெளிப்பாடு என்றாலும், அதற்கு ஆதாரமாக அந்த தூய அறிவு அவனுள் பிரகாசிப்பதினால் வெளிப்பட்டவைகள் என்பதையும் அறிய வேண்டும்.

இந்த அறிவினைப் பெற நாம், நமது உடல், அதைச் சார்ந்த கருவி கரணங்கள் எனும் நமது ஐம்புலன்கள் மற்றும் மனம் போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம்.

இக்கருவிகள் புறத்தோற்றத்தை நோக்கி இயல்பாகவே செல்கின்றன. புறத்தோற்றத்தின் விஷய அனுபவத்தில் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு விநாடியும் இந்த விஷய அனுபவங்கள் **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** ஆகிய கருவிகளைத் தாக்குகின்றன.

ஐம்பொறிகள் வழியாக அனுபவங்களைச் சேகரிக்க, புத்தி அவற்றைப் பாகுபடுத்த, அகங்காரம் அவற்றிற்கு ஒரு எழுச்சியைக் கொடுக்க, சித்தம் அவற்றிற்கு ஒரு விளக்கம் கொடுத்துக் கிடைத்த அனுபவத்தை அறிவாக்க, அந்த அறிவு நமக்கு **"நாம்" "நமது"** என்கிற உணர்வினைக் கொடுத்து நம்மை ஒருவிதமான மாயையிலே ஆழ்த்துகின்றது.

நமது அன்றாட வாழ்வில் நாம் ஏதாவது ஒரு சிறிய சாதனையைப் புரிந்திருந்தாலும் அது நமது சாதனை, அதை நாம் புரிந்தோம் என்று எண்ணி, மகிழ்ச்சியடைந்து, பெருமிதம் கொண்டு நம்மைப் பிறரிடமிருந்து பிரித்துக்

கொண்டு, வேற்றுமை காட்டி நமக்கென்று ஒரு தனித்தன்மையை நாம் சதா வலியுறுத்தி வருவதும் இந்தக் கருவி, கரண இயக்கத்தின் அடிப்படையில்தான் .

இந்த இயக்கம் நமது உடலில் நடைபெறுகிறது. நமது உடல் ஐம்பூதங்களால் ஆகியது.

இங்கே ஞான இந்திரியங்களாகிய ஐந்து புலன்களைக் கொண்டுதான் நாம் எல்லாவற்றையும் அறிகின்றோம் என்றாலும், அந்த ஐம்புலன்கள் எப்போதும் நம்மை வெளியே மட்டுமே பார்க்க வைக்கின்றன. அதாவது, நம்மை சதா வெளியே செலுத்துகின்றன .

இத்துடன் நமது உடலில் ஐந்து கன்மேந்திரியங்கள் உள்ளள. அவைகள் புரியும் செயல்களும் உடலுக்கு அனுபவத்தைச் சேர்க்கின்றன.

இவ்வாறு ஒரு இயக்கம் நடைபெறுகின்றது என்றால், அதை நடத்த ஒருவன் இருக்க வேண்டும். . அதுவே உடலை இருப்பிடமாகக் கொண்ட உயிராகும். உயிரானது உடலின் பல்வகைக் கருவிகளைத் தனது இயக்கத்திற்குப் பயன்படுத்தி வருகின்றது. இதைத் திருமந்திரம் அழகாக எடுத்துக்காட்டுகிறது.

"புலம் ஐந்து புள் ஐந்து புட்சென்று மேயும்
நிலம் ஐந்து நீர் ஐந்து நீர்மையும் ஐந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலம்வந்து போம்வழி யன்பது தானே". (திருமந்திரம் – 2025).

இந்த உடலின் புலன்கள் என்ற கருவிகள் சடப்பொருள்களே .அவைகள் தானாக இயங்காது. அந்த கருவி, கரணங்களை உடலினுள்ளேயுள்ள உயிரின் உன்னதமான அறிவால்தான் அவைகள் இயங்குகின்றன .

எனினும், இந்த உடலிலுள்ள கருவி, கரணங்களோடு உயிரானது இணைந்து செயல்படும்பொழுது, கருவி கரணங்கள் தானாகவே இயங்குவது போன்ற ஒரு பிரமை நமக்குத் தோன்றுகிறது .

உயிர் வேறுகருவி கரணங்கள் வேறு என்கிற, விவேகம் நமக்கு விழிப்பு நிலையில் அறியப்படாதபொழுது கருவி கரணங்களே தன்னிச்சையாக .செயல்படுகின்றன என்கிற மயக்கம் நம்முன் எழுகிறது

உயிருக்கு கருவி கரணங்கள் தேவை.

கருவி கரணங்கள் இல்லாதபொழுது உயிர் இந்த உடலைக் கொண்டு செயல்பட முடியாது. இறைவன் அருளால் உயிருடன் உடலும், கருவி கரணங்களும் பிறப்பின்போது சேருவதால், இந்த மனித உடலில் மட்டுமே உயிருக்கு தன்னைப் பற்றிய விளக்கம் பெறக்கூடிய வாய்ப்புக் கிட்டுகிறது .

அத்துடன் இந்த உலக விஷய சுக, போக அனுபவங்களைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் இந்த உடலின் வாயிலாக உயிருக்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

விஷய அனுபவங்களையே உண்மையானவை என்றும், அவற்றைப் பெற வசதி செய்து கொடுக்கும் உடம்பும், கருவிகளுமே உண்மையானவை என்றும் ஒரு வித விபரீத உணர்வும் உயிருக்குத் தோன்றத் தொடங்குகின்றது.

இதனால், இந்த உயிரானது இந்த உடலை 'நான்' என்று அபிமானிக்கத் தொடங்குகின்றது

அடுத்து, தன் உடலைப் போன்ற உறவுகளின் உடல்களையும் அவர்கள் என்பதாக அபிமானிக்கின்றது. ஆனால், மரணத்தில் உயிர் பிரிந்த உறவுகளின் உடலைப் பார்த்து அவர் போய்விட்டாரே! என்று புலம்புகின்றது. அப்போது மட்டும் இந்த உடல் அவரல்ல! அவர் உயிர் என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

கருவி கரணங்கள் வழியாக நாம் பெறும் அறிவு உயிரைச் சேர்ந்த அறிவாகும்.

உயிருக்கு அறியும் தன்மை உண்டு.

உயிரே அறிவுமயம் எனவும் கொள்ளலாம்.

ஆனால், உயிரானது எத்தகைய அறிவினைப் பெறுகிறது என்பது உயிரின் பக்குவ நிலயைப் பொறுத்திருக்கின்றது.

ஆகவே, நாம் பெறும் விஷய அனுபவங்களைப் பற்றிய அறிவு உயிரின் திறனுக்கேற்ப நிற்கும். இந்த அறிவு நமது கல்வி கேள்விகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

மனிதனின் ஆக்கபூர்வமான சக்தி இந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டு மனிதன் பல துறைகளில் முன்னேற வழிவகை செய்கிறது. சமுதாய வளர்ச்சிக்கு இந்த அறிவே மையமாகிறது. விஷய அனுபவங்களின் அறிவு விஞ்ஞானம், கலை, பண்பாடு ஆகிய துறைகளில் மனிதன் பல பிரமிக்கத்தக்க சாதனைகளைப் புரிய பயன்பட்டுள்ளது.

அறிவே ஆற்றல் என்று மேலை நாட்டு அறிஞர்கள் கூறும் அளவுக்கு ஐம்பொறிகள் வாயிலாகக் கிடைக்கக்கூடிய அனுபவ அறிவு மனிதனின் சிநத்னையில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

ஆனால், இந்த அறிவு ஒரு சிறிய வட்டத்திற்குள்தான் இயங்கும் .

விஷய அனுபவங்கள் புலன், பொறிகளின் செயல்களுக்கேற்ப உயிரை வந்து சேரும். பொறி, புலன்கள் உடலைச் சார்ந்த கருவிகளாதலால் அவற்றின் செயல்கள் உடலின் நிலையைப் பொறுத்திருக்கும். உடலை உயிர் இயக்கும் காரணத்தினால் உயிரின் நிலை கருவி கரணங்களின் செய்கைகளை வெகுவாகப்பாதிக்கும்.

உடலும், அதன் கருவி கரணங்களும் நிலையற்றவை. அழியும் தன்மை பெற்றவை.

ஆக, அவற்றின் வழியாகப் பெறக்கூடிய அனுபவமும், அறிவும் நிலைத்து நிற்காது. அவைகள் காலத்தின் போக்கால் கட்டுப்படுத்தப்படும்.

காலம் என்பது நிகழ்வதையும், நிகழ்ந்ததையும், நிகழப்போவதையும் வேறுபடுத்தி நமது சித்தத்திற்கு அளிக்கும்பொழுது விஷய அறிவும் காலத்தின் கட்டுப்பாட்டால் பாதிக்கப்படும். விஷய அனுபவங்களுக்கு கலை எழுச்சியூட்டும். அனுபவங்களின் தன்மை உயிரின் கன்ம பலத்தின் அடிப்படையில் அமையும்.

கலையும், நியதியும் உயிரானது பல பிறவிகளில் பெற்ற வினைக்கூட்டங்களும் பொறிபுலன்களின், காட்சி அனுபவங்களின் உண்மைத் தன்மையை மாற்றியும் விடும்.

விஷய அறிவு, பொதுவாக, பொருட்களைப் பற்றியதாக இருக்கும். ஏனென்றால், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் புறத்தேயுள்ள பொருட்களின் மீது இயல்பாகவே கூடுதலாகத் தங்களுடைய நாட்டத்தைச் செலுத்தும்.

கருவி, கரணங்கள் பொருட்களைப் பற்றிய அறிவினைப் பெறுவது நேரிடையாகவும் இருக்கலாம். மறைமுகமாகவும் இருக்கலாம். கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் பொருட்களைப் பற்றித் தெரிந்துக் கொள்ளலாம்.

அத்துடன் சூக்குமமாக இருக்கும் பொருட்களைப் பற்றியும் யூகித்தல், அனுமானித்தல் போன்ற வழிகளில் அறிந்துக் கொள்ளலாம்.

ஒரு பொருளைப் பார்க்கிறோம். நேராகத் தெரிந்து கொள்கிறோம். அப்பொருளிலுள்ள கோடிக்கணக்கான அணுக்களை நாம் பார்க்க முடிவதில்லை. ஆனால், அதற்காக நிறுவப்பட்ட கருவிகளை வைத்து அவற்றைப் பார்த்துக் கொள்கின்றோம்.

இல்லாவிட்டால், அவற்றினுடைய தன்மையைப் பற்றி மறைமுகமாகத் தெரிந்து கொள்கின்றோம்.

பௌதிகம், இரசாயனம், தொழில்நுட்பக் கல்வி போன்ற பலவிதமான துறைகளில் நாம் இன்று பெற்றுள்ள அறிவு நமது பொறிகள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்கள் ஆகிய உட்கருவிகள் இணைந்து செயல்பட்டதன் விளைவே ஆகும்.

பொறி, புலன்களிலிருந்து வெளிப்படும் அறிவு மீண்டும் மீண்டும் அவற்றையே வலுப்படுத்த முயலும். அதனால் கிடைக்கூடிய இன்பங்களை வளர்த்தும், துன்பங்களைத் தவிர்த்தும் வாழ்க்கையைப்புலன் அனுபவப் பாதையிலே செலுத்துவது உயிருக்கு இயல்பாகி விடுகிறது.

இந்த அறிவினால் உயிருக்கு உடல் மீது உள்ள பாசம் வளருகின்றது.

மேற்கூறிய அறிவைத் தவிர வேறு எத்தகைய அறிவும் இல்லை என்று நமது உள்ளத்திலே ஓர் எண்ணம் எழுவதும், அந்த அறிவின் விளைவே அனைத்தும் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில், நமது அறிவு இந்த உடலின் வாயிலாக சிற்றறிவு என்பதாக சுருக்கிக் கொள்கின்றது. இந்த உடலுக்கு கட்டுப்படாத பேரறிவு மட்டுமே நான் என்பது நம்மால் மறக்கடிக்கப்படுகின்றது.

சாந்தோக்கிய உபநிடத்தில் ஒரு நிகழ்ச்சியில் இதைப் பற்றிய உரையாடல் ஒன்று வருகிறது.

சனத்குமார முனிவரிடம் நாதரதர் சென்று தனக்குத் தக்க அறிவினைப்புகட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றார்.

"உனக்குத் தெரிந்ததைப் பற்றிச் சொல், தெரியாததைப் பற்றிப் பின்னர் விளக்குகின்றேன்" என்கிறார் சனத்குமாரர்.

"எனக்கு வேதங்கள் தெரியும். இதிகாசப் புராணங்கள் தெரியும். இலக்கணம் கற்றுள்ளேன். கணிதம், தத்துவம், விஞ்ஞானம், பௌதிகம், கலைகள் ஆகியவெல்லாம் நன்கு தெரியும். இவற்றையெல்லாம் நான் கற்றிருந்தும் எனது உள்ளத்திலே ஒரு குறை உண்டு. எல்லாவற்றையும் நான் முழுமையாகத் தெரிந்து கொண்டதாக ஓர் உணர்வனைப் பெறவில்லை" என்கிறார் நாதரதர்.

**"கற்றதெல்லாம் பெயரளவில் "**என்று சனத்குமாரர் பதிலளிக்கிறார்.

ஔவையார் **கற்றதெல்லாம கைம்மண் அளவு** என்றார் .

சனத்குமாரர் **கற்றதெல்லாம் பெயரளவில்** என்கிறார்.

ஒவ்வொரு பொருளுக்கும் உருவம் உண்டு. பெயரும் உண்டு.

பெயரையும் உருவத்தையும் வைத்து அப்பொருளின் தன்மையை, இடத்தை, காலத்தை நிர்ணயித்துக் கொள்ளுகின்றோம்.

பெயரும், உருவமும் ஒரு பொருளைச் சுட்டிக் காண்பிக்கின்றன.

அதாவது, அவற்றால் ஒரு பொருள் உண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நாரதர் கற்ற கல்வி பெயரளவில்தான் என்று சனத்குமாரர் கூறும்பொழுது அந்தக் கல்விக்கு அப்பால் வேறொரு கல்வி உள்ளது.

வேறொரு அறிவு உள்ளது.

அந்த அறிவே இந்தக் கல்விக்கு அதனுடைய விசேஷத் தன்மையைக் கொடுக்கின்றது என்கிற உணர்வு நம்முள் தோன்றுகிறது.

பெயர், பெயரிலிருந்து வாக்கு, வாக்கிலிருந்து மனம், புத்தி, சித்தம், தியானம், ஞானம், வலிமை, உணவு, நீர், நெருப்பு, ஆகாயம், நினைவாற்றல், இச்சை, பிராணன், வாய்மை, சிரத்தை, தவம் என்றெல்லாம் படிப்படியாகச் சனத்குமாரர் நாரதருக்கு அவர் பெற்ற அறிவின் தன்மையை விளக்கி, பரம்பொருள் விளக்கத்திற்கு அழைத்துச் சென்று பரம்பொருளைப் பற்றிய அறிவே, பரம்பொருளே எல்லாவற்றிற்கும் மேலான அறிவென உள்ளத்தில் பதிய வைக்கின்றார்.

பரம்பொருள் அறிவு மட்டுமே முழுமையான அறிவு எனப்படும்.

நாம் கருவி கரணங்களைப் பயன்படுத்திப் பெறும் அறிவு புற அறிவு என்ற அடிப்படையில் அது ஒரு பகுதி அறிவாகும்.

விஞ்ஞான அறிவு நமக்குக் கொடுக்கும் அறிவு

இது ஒரு பகுதி அறிவுதான்.

ஒரு பொருளைப் பற்றி நாம் தொடர்ந்து விசாரித்துக் கொண்டே போனால் அந்த விசாரணையின் வழியாக நமக்குப்பற்பல அறிவு கிட்டலாம்.

ஆனால், இத்தகைய அறிவு உடலுடன் இயங்கும் கருவி கரணங்களின் வழியாகப் பெறப்படும் அறிவாகையால் இது இடம், காலம் முதலியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டது.

நான் என்கிற முனைப்பின் அழுத்தத்தால் வெளிப்படும் அறிவின் திறம் நம்முடைய குறைந்த ஆற்றலையே பிரதிபலிக்கும் தன்மையுடையது.

முழு அறிவு என்பது ஒரு மிகப்பெரிய வட்டமாகும்.

பகுதி அறிவு இந்த வட்டத்தில் எங்கோ ஒரு சிறிய பகுதியை இடம் கொண்டதாகும். சிற்றறிவு என்றுமே முழுமையான அறிவாகாது.

அதே நேரத்தில் முழு அறிவாகிய பெரிய வட்டம் சிற்றறிவுப் பகுதிகளைத் தன்னுள் அடக்கி நிற்கும்.

முழு அறிவாகிய பெரிய வட்டத்தின் தன்மையை இந்த சிற்றறிவு மாற்ற முடியாது. அது நிலையான தன்மை பெற்றது.

சிற்றறிவுப் பகுதிகளின் தன்மை மாறிக் கொண்டே இருக்கும்

. அதையே விஞ்ஞான வளர்ச்சிஎன்கிறோம்.

விஞ்ஞான அறிவு வளர வளர நாம் முன்பு பெற்றிருந்த அறிவை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் புதிய உண்மைகளைச் சேகரித்துக் கொள்கின்றோம்.

ஆனாலும் இவ்வாறு நாம் பெறும் அறிவு முழுமையான அறிவாகாது.

இந்த புற அறிவு நம்மை ஒரு மயக்கத்திலே ஆழ்த்தும்.

அத்தகைய அறிவின் வளர்ச்சி ஆற்று வெள்ளத்தோடு போகும் பொருட்களைப் போல நம்மைக் கட்டுக்கடங்காத நிலைக்கு அழைத்துச் செல்லும்.

இதனை,

அறிவு ஐம்புலனுடனே நான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீர் ஆழம் போல
அறிவு அறிவுள்ளே அழிந்தது போல
குறியறி விப்பான் குருபரனாமே. – திருமந்திரம் – 119

நீரின் ஆழம் அறியாது வெள்ளத்தில் சிக்கிய ஒருவனைப்போல, ஐம்புலன்களுக்குள் சிக்கிய மனம் எனும் மாய வலையில் பின்னப்பட்ட அறிவு சிற்றறிவாகும்.

அதுவே, அந்த தூய அறிவானது மாய வலையில் சிக்காமல், விவேகத்தினால் விழித்துக் கொள்ளுமானால், அந்த அறிவே தூய அறிவாக மாறுகின்றது.

ஆகவே, ஏற்றி வைத்துக் கொண்ட புற அறிவினால், தன் சுய அறிவை இழந்த மனிதனைக் காப்பாற்ற விரும்பிய குருபரன் அந்த சீவனுக்கு (உயிருக்கு) வாளறிவெனும் கயிற்றில் கட்டி, புற அறிவு என்ற அஞ்ஞானம் என்ற பாசக்கயிற்றனின்றும் விலக்கி, அதன் உண்மை சொரூபமாக இருக்கும் தூய பேரறிவைக் காட்டி நற்பதம் அடையச் செய்வார்.

அந்த குருபரன் வேறு யாராக இருக்க முடியும்?

அந்த குருபரன் வேறு யாருமல்ல.

நம்முள்ளே எப்போதும் **நான், நான்** என்று ஸ்புரணம் ஆகிக் கொண்டிருக்கும் அந்த **தூய அறிவே** நமது குருபரன்.

ஆகவே, எப்போதும் அந்த பத்தாவது வாசல் வழியாக உள்ளே வந்த உயிராகிய குருவின் திருவடியில் இருப்பதே உண்மையான தீட்சை.

பொதுவாக, நீரில் மூழ்குபவனின் உடல் மூன்று முறை வெளிவரும் பின்னர்தான் உயிர் பிரியும்.

அதுப்போல, நம்மிடம் உள்ள அந்த அறிவு வெளிப்பட வேண்டுமானால், முதலில் பருவுடல் அபிமானம் விடப்பட வேண்டும். அடுத்த முயற்சி, மனதின் ஆற்றல் அபரிமிதமானது என்று அறிய வேண்டும். அந்த வகையிலே, மனம் போன போக்கில் போக முயற்சிக்க் கூடாது.

அந்த மனதை அறிவினால் கையாளத் தெரிய வேண்டும். மூன்றாவது, அந்த மனதை அறியாமை நிலையிலிருந்து தூய அறிவு நிலைக்கு உயர்த்தும், உயரிய அத்யாத்ம ஞானக் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே அந்த மனம் தூய அறிவு ஒளிப்பிரகாசமாக, விழித்துக் கொண்ட விவேகம் என்பதாக வெளிப்பட ஆரம்பிக்கும்.

ஆகவே, எப்போதும் நம்மிடம் '**நான், நான்**' என்று எப்போதும் ஸ்புரணம் ஆகிக்கொண்டிருக்கின்ற அந்த தூய உணர்வை புருவ மையத்தில் நினைத்தால் போதும், அதுவே குரு. அதுவே, பரம். அதுவே, அனைத்தும்.

இதை உணர்ந்துக் கொள்வதில் மட்டும்தான் சாதாரண மனிதர்களுக்கும், மகான்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

ஆக, இந்த **பிறப்பு – இறப்பு** என்ற சம்சார சாகரத்தைக் கடக்க தோணியாவது சுழுமுனை குரு உணர்வு மட்டுமே ஆகும்.

இதைத்தவிர வேறு என்ன விசய, சுகங்களில் ஒருவன் சிக்கி கொண்டிருந்தாலும், அவன் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாது.

வெளி விசயங்களில் ஆர்வம் காட்டுகின்ற மனிதர்கள் அதிலேயே சிக்கிக் கொள்கின்றார்கள். இவர்கள் வெளி வேஷங்களால் தன்னையே ஏமாற்றிக் கொள்கின்றார்கள்.

ஆகவே, இந்த தூய அறிவை நம் உள்ளத்தால் உணராமல், மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட புற அறிவைப் பெறுவதும், இந்த அறிவினால் இன்பத் துன்பங்களை அநாதி காலம் முதல் தாங்கி அனுபவிப்பதும் தன்னை தனித்து அடையாளப்படுத்திக் கொண்ட சீவன் என்ற உயிராகும்

உயிர் அறிவுடைய பொருள்தான்.

ஆனால், அதனுடைய அறிவாற்றல் சிறியது.

ஐந்து இந்திரியங்கள், ஐம்புலன்கள் உட்கருவிகள் போன்றவை இல்லாத இடத்தில் உயிரின் அறிவாற்றல் இயங்குவதற்கு வழியே இல்லை.

பேரறிவாகிய இறைவனின் வட்டம் நமது கற்பனைக்கு எட்டாத அளவுக்கு பெரியது.

உடலுக்கு உள்ளேயுள்ள உயிரினுடைய அறிவாற்றல் வட்டம் சிறியது

இதை உணரும்பொழுது நாமே அறிவு, நமது அறிவின் சாதனையே சாதனை என்றெல்லாம் நாம் இறுமாப்படைவது நமது சிறுமையை எடுத்துக் காட்டுகின்றது.

நாமே எல்லா அறிவுக்கும் சொந்தக்காரர்கள் என்பது ஒரு பெரிய வேடிக்கை அல்லவா என்கிறது திருவருட்பயன்.

**பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)**
**அறிவென்ற பேர்நன்(று) அற.**

பேரறிவினைப் பற்றி தம்முள் உணர்ந்துக் கொண்ட மகான்கள் இத்துடன் நிற்பதில்லை.

அனைத்தையும் அறியும் முழுமையான அறிவே உண்மையான அறிவென்றும் மற்றதெல்லாம் அறியாமை என்றும் கூறுகிறார்கள்.

ஏனெனில், உடலின் கருவி கரணங்களைப் பற்றி நாம் பெறும் அறிவு உடலையே சார்ந்திருக்கும்.

ஆகையால் உடலைப் பற்றிய அறிவு பரம்பொருளைப் பற்றிய ஒரு அறியாமை நிலைக்கு நம்மைத் தள்ளி விடும்.

ஒன்றைப் பார்க்கும்பொழுது மற்றதைப் பார்க்க உள்ளத்திலே ஆவல் எழும்பாது. அந்த அறிவு பாசத்தோடு சம்பந்தப்பட்ட அறிவாகும். அதாவது உயிரைச் சார்ந்த ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்கள் அந்த அறிவுக்கு ஒரு உருவத்தைக் கொடுக்கின்றன.

நமது மனம் அந்த உருவத்திலே ஈடுபட்டு விடுகின்றது.

உருவம் எத்தகைய மூலப்பொருளினால் செய்யப்பட்டிருக்கின்றது என்று அறிந்துக் கொள்ள நமக்கு ஆவல் எழுவதில்லை.

ஆகவே, உருவத்தைப் பற்றிய அறிவு உண்மையிலேயே ஒரு அறியாமையாகும்.

யானைப் பொம்மையைப் பார்க்கும் ஒரு குழந்தைக்கு அது மரத்தால் செய்யப்பட்டுள்ளது என்கிற உணர்வு தோன்றுவதில்லை.

பல தங்க ஆபரணங்களைப் பார்த்து அதிசயப்பட்டு நிற்கும் பெண்மணிக்கு அவற்றின் மூலப்பொருள் தங்கமே என்கிற உண்மை தோன்றுவதில்லை.

அந்த அளவுக்கு அவள் அந்த ஆபரணங்களின் அழகில், வேலைப்பாட்டில் தனது மனத்தைப் பறிகொடுத்து விடுகிறாள்.

உண்மை அறிவின் முன் நாம் பெற்றுள்ள அறிவெல்லாம் அறியாமைதான் என்கிறார் திருமூலர்.

இந்த அறிவு, அறியாமை ஆகிய நிலைகளுக்கு அப்பால் ஒரு நிலை உள்ளது.

அதுவே ஒரு பேரறிவு நிலை. பேரனுபவ நிலையுமாகும்.

அந்தப் பேரறிவு நிலை கதிரவனின் ஒளி போல மற்ற எல்லா அறிவு நிலைகளையும் இருளிலிருந்து மீட்டு பிரகாசப்படுத்துகிறது.

அந்த அறிவு நிலைக்குச் சமானம் வேறொன்றுமில்லை. அது பேரானந்தத்தைக் கொடுக்கும். திருமூலர் கூறுவது போலவே அது ஓர் அழகிய நிலையாகும். தன்னிலை விளங்கும். பிற உயிர்களுடைய நிலையும் தெளிவாகும். நமது உயிரின் இயக்கத்திற்கான சுத்தமான விளக்கம் கிடைக்கும்.

அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்தறி வானால்
அறிவு அறியாமை யழகிய வாறே. – திருமந்திரம் – 2362

இன்றைய உலகில் கல்விக்கு ஒரு பெரிய இடத்தை நாம் கொடுத்திருக்கின்றோம்.

கல்விக் கூடங்களில் விஞ்ஞானத்தைப் பற்றிய கல்வி முதலிடம் பெறுகிறது.

விஞ்ஞானத்தை மேலும் மேலும் கற்றுக் கொண்டு, விஞ்ஞான கல்வியை வாழ்க்கை இன்பத்திற்காகப் பயன்படுத்தி, வசதிகளைப் பெருக்கிக் கொள்வதே ஒரு சிறந்த குறிக்கோளாக வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கல்வியால் ஒழுக்கமோ, அடக்கமோ, நேர்மையோ, சீலமோ கற்பவர்களுக்குக் கிடைக்குமா? என்று நாம் பெரிதும் கவலைப்படுவதில்லை.

அதற்கு மேலாக நம்முடைய உள்ளங்களிலே பரம்பொருளைப் பற்றிய விளக்கம் கிடைக்குமா என்றும், நாம் கற்கும் கல்வியின் பயனாக அமைய வேண்டுமென்றும் நினைத்துக் கொள்வதில்லை.

ஆனால், நமது முன்னோர்கள் கல்வியின் பயன் இறை உணர்வு என்றும், அந்த உணர்வின் விளைவு ஒழுக்கம் என்றும், அந்த ஒழுக்கத்தைப் பெற்றவர்கள் நற்கல்வி கற்றவர்கள் என்றும் அறிவுறுத்தினர்.

குறிப்பு அறிந்தேன் உடல் உயிர் அது கூடி;
செறிப்பு அறிந்தேன் மிகு தேவர் பிரானை;
மறிப்பு அறியாது வந்து உள்ளம் புகுந்தான்;
கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே. – (திருமந்திரம் 290)

உயிர் ஏன் உடலுக்குள் வந்தது? என்ற கேள்வி எழுந்தபோது நான் கற்றிருந்த அடிப்படைக் கல்வி அதற்கு உடனடி விடை தராமல் என் நெஞ்சைக் கறித்தது; அதாவது, உண்ட உணவு எதிர்க்களித்தது.

அதற்கு மசங்காமல் விசாரிக்கத் தொடங்கினேன்.

நிலையானது எது, நிலையற்றது எது,

எப்போதும் துணையாக என்னோடு இருப்பது எது,

எப்போது வேண்டுமானாலும் என்னைக் கைவிட்டுவிடுவது எது,

பற்றிக்கொள்ளத் தகுந்தது எது, பற்றிக்கொள்ளத் தகாதது எது என்று தெளிவாகத் தொடங்கியது.

இந்த அறிவை ஆய்ந்து பெற்று அதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளத்தான் உயிர் உடலுக்குள் வந்தது என்னும் குறிப்பை இந்தத் தொடர் விசாரணையின்மூலம் நான் அறிந்தேன்.

தேவர் பிரானாகிய இறைவன் என்னோடு இருப்பதும், எனக்குள்ளே இருப்பதும் விளங்கத் தொடங்கியது.

திரும்பிப் போகும் திட்டம் இல்லாது என் உள்ளத்துக்குள் புகுந்துகொண்டான் இறைவன்.

நாடு, நகரம், கோயில், குளங்கள் என்று நான் தேடித் திரிந்த பரம்பொருளை எனக்குள்ளேயே காட்டிய அத்யாத்ம ஞானக் கல்வி ஒன்று மட்டும்தான் உண்மையான கல்வி.

என் நெஞ்சைக் கறிக்காத கல்வி. குமட்டிக்கொண்டு எதிர்க்களிக்காத கல்வி என்று திருமூலர் கூறுகின்றார்.

இந்த நிலையில், சிவத்தைப் பற்றிக்கொள்ளாதவர்கள் எண்ணும், எழுத்தும் கற்றிருந்தாலும் கல்லாதவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

எண்ணும், எழுத்தும் கல்லாத வேடராகிய கண்ணப்பரைப் போன்றவர்கள் சிவத்தைப் பற்றிக்கொண்டுவிட்டதால் கற்றவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

பற்றிக்கொள்ள விரும்புவது எது? என்பதைப் பொறுத்துக் கல்வி கல்லாமை ஆகிறது.

கல்லாமை கல்வியும் ஆகிறது.

பற்றுவது சரிதான். ஆனால், கற்றபின் வந்த தெளிவினால் பற்றுவதா, அல்லது பற்றுவது என்று முன்முடிவினால் கற்பதா?

கற்பக் கழிமடம் அஃகும்; மடம் அஃகப்
புற்கம் தீர்ந்து இவ்வுலகின் கோள் உணரும்; கோள் உணர்ந்தால்
தத்துவமான நெறி படரும்; அந்நெறி
இப்பால் உலகத்து இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும். – (நான்மணிக் கடிகை, 30)

கற்றால் அறியாமை நீங்கும். அறியாமை நீங்கினால் இவ்வுலகின் தன்மை என்ன என்பது விளங்கும். அது விளங்கினால் உண்மை என்ன என்ற தேடுதல் தொடங்கும். அது தொடங்கினால் அறிவாளன் என்ற புகழை இந்த உலகில் நிறுத்தி, உயர்ந்த உலகத்துக்குள் புகலாம்.

எனவே, கற்றல் முதலில். பற்றல் பின்னால். வண்டிக்கு முன்னால் மாட்டைப் பூட்டுவதுதான் முறை. அதுப்போல, அத்யாத்ம ஞானக்கல்வியைப் பெறுவது மட்டும்தான் முதல் முயற்சியாக இருக்க வேண்டும்.

அத்தகைய கல்வியைப் பெறுவதே நமது குறிக்கோளாக அமைய வேண்டும். அத்தகைய அறிவினைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற் கொள்ளாமல் சிற்றறிவினைப் பெருக்கிக் கொண்டு போவதில் பயனில்லை என்கிறார் திருமூலர்.

நம்முடைய முயற்சிகள் இறை அறிவைப் பெறுவதில் செலுத்தப்பட வேண்டும்.

நம்முடைய முயற்சிகளின் பலனாக, இறைவனுடைய திருவருளால் பரம்பொருளைப் பற்றிய ஞானத்தை நாம் பெற்றோமாகில் எல்லாவற்றையும் அறிந்த ஒரு நிலையை நாமும் பெற்றுவிடலாமே என்கிறார் திருமூலர்.

இந்த அறிவே பரஞானமாகும்.

இது திருவருள் இருப்பினால் நிகழ்கின்றது.

இந்த அறிவினை நாம் உள்ளுணர்வாகப் பெறுகின்றோம். இந்த அறிவு நமக்கு அனுபவத்தால் கிடைக்கின்றது.

அருளாளர்கள், இறை உணர்வாளர்கள் இந்த அனுபவத்தைப் பெற்றிருந்தனர். புறக்கண்களால் காண முடியாத ஒன்றை அகக்கண்களால் கண்டு பேரின்பம் பெற்றார்கள்.

"தேடிக் கண்டு கொண்டேன் – திரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டுகொண்டேன்"
– திருநாவுக்கரசர்.

புறக்கருவிகளால் இறை அனுபவத்தைப் பெறுவது இயலாது.

சிற்றறிவு என்பது, மிகச் சிறிய வட்டம். இந்த வட்டத்திற்கு அப்பால் நிற்கும் பெரிய வட்டமாக இருக்கும் ஒன்றைச் சிற்றறிவினால் பிடித்துவிட முடியாது.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனே. – திருமந்திரம் 2944

பரம்பொருளைப் பற்றிய ஞானக்கல்வி அருளாளர்களுக்கு உள் அனுபவமாகக் கிடைக்கின்றது.

இது திருவருளால் கிடைத்த காரணத்தால் அருள் அனுபவமாகவும் உள்ளத்துள்ளே நின்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. திருவருளால் அந்த அனுபவத்திற்கான தகுதியும் பக்குவமும் பெற்றவர்கள் அந்த அனுபவத்தைப் பெறுகின்றனர்.

*"திருவருளால் விளக்கம் பெற்ற அகக்கண்ணைத் திறந்து பார்த்தேன் – அவ்வாறு திறந்து பார்க்கும்பொழுது, ஒப்பற்ற தலைவன் சிவமாகிய பரம்பொருள் என் உள்ளத்தில் சோதி மயமாக நிறைந்திருந்து, என்னை அறிவுமயமானவன் என்று உணர்த்தி அருளினான்"* எனத் திருமூலர் தனது அனுபவத்தைச் சொல்லுகின்றார்.

"மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுந்
தன்னுற்ற சோதி தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என்னுற் றறிவனான என் விழித் தானே". – திருமந்திரம்.

அருள் அனுபவம் வாக்கிற்கும், ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது.

பரம்பொருளை அழியும் பொருள்களால் அளக்க முடியாது. அருள் அனுபவம் பெற்ற பெரியோர்கள் வியப்புண்டு. அன்பு மேலிட்டு, பேச்சற்ற நிலைக்கு வந்து விடுகின்றனர். அந்த நிலையையே அவர்கள் பேரின்ப நிலையாகக் கருதுகிறார்கள்.

**"பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே"** என்பார் திருமூலர்.

பெற்றார் உலகில் பிரியாப் பெரு நெறி
பெற்றார் உலகில் பிறவாப் பெரும் பயன்
பெற்றார் அம் மன்றில் பிரியாப் பெரும் பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே. – திருமந்திரம்.

அருள் அனுபவத்தை வெறும் சொற்களாலும், மொழிகளாலும் மட்டும் விளக்கிவிட முடியாது. இறைவனைத் தம்முள் உணர்ந்தபின்னர் பேரின்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும் இறை உணர்வாளர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சம்பிரதாய முறையில் மொழியைப் பயன்படுத்தி மக்களுக்குத் தெளிவாக்க முற்பட்டாலும், அவர்களுடைய உள்ளக்கிடக்கை, பண்பட்ட உணர்வினை மொழிகள் முழுமையாகப் பிரதிபலிக்காது என்பது அறிவாளர்கள் நமக்குக் கூறும் உண்மையாகும்.

எனினும் மக்களுக்குத் தங்களது உணர்வைப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய காரணத்தினால் அவர்கள் மொழியினைக் கையாளுகிறார்கள்.

உண்மையில் **"சும்மா இருக்கும் சுகம்"** மொழிக்கு அப்பாற்பட்டது.

இந்த நிலையில் அருள் அனுபவத்தைச் சாஸ்திரங்களிடமிருந்தும், பல்வேறு மகான்களின் நூல்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியாது. சாஸ்திர நூல்கள் ஒரு வழியை, பாதையைக் காண்பித்துக் கொடுக்கலாம். ஆனால், சென்று அடைய வேண்டிய இடம் சாதகனுடைய சாதனையைப் பொறுத்திருக்கின்றது.

ஆகவே, வெறும் நூல் அறிவு பெற்று மட்டும் இறைவனை அடைய முடியாது என்பது அருளாளர்களுடைய அனுபவமாகும்.

தவம், சீலம், நோன்பு போன்றவற்றின் அடிப்படையில் இறைவனை அடைய வேண்டிய பல கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும், நேர்மையுடனும், முழுமனதுடனும் கையாளும்போது வந்தடையக்கூடிய இன்பம் இறை இன்பமாகும் என்பது காரைக்கால் அம்மையாருடைய அனுபவமாகும்.

அந்த நிலையில் இறைவனை எந்தக் கோலத்தில், எந்த வடிவாக எண்ணியும், பார்த்தும் எத்தகைய தவம் செய்தாலும் அந்தக் கோலத்தில், அந்த வடிவிலேயே வந்து இறைவன் அருள் புரிவான் என்கிற உண்மையை நமக்குத் தெளிவாக்குகின்றார் காரைக்கால் அம்மையார்.

"நூல்அறிவு பேசி நுழைவு இலா தார் திரிக!
நீல மணிமிற்றான் நீர்மையே – மேல் உவந்து
எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வோர்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்". – (அற்புதத் திருவந்தாதி)

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா. சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்றார் திருஞானசம்பந்தர். இறை அனுபவம் இறை அருளால்தான் கிட்டும். இறை அருள் ஆசான் உருவமாக எழுந்தருளி, உபதேசித்தருளி பக்குவப்பட்ட உயிருக்கு இறை அனுபவத்தைக் கூட்டி வைக்கும். எல்லாவற்றிற்கும் காரணமான பொருளை ஏடுகள், சுவடிகள் மூலமாக மட்டும் அனுபவித்துவிட முடியாது.

"காட்டுங் குறியும் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே". – (திருமந்திரம் – 2937)

எழுத்தில் அடங்கி நிற்காத பரம்பொருளை விரிவுபடுத்திப்பேசவும், உரை செய்யவும் முயலுகின்றோம். இந்த முயற்சி வெற்றி பெறுமா? பெறாது.

வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஒரு கரையில் நின்றுகொண்டு வெள்ளத்தைப் பார்க்கலாம். மறுகரை நமது கண்ணுக்கு எட்டாத அளவுக்கு வெள்ளம் ஓடுகிறது. அதேபோல உரையற்ற பரம்பொருளுக்கு உரை காண முயலுவது வீணான முயற்சியாகும்.

ஆனால், ஒன்று, இறைவன் நம்முடைய சிந்தைக்கு அகப்படக் கூடியவன்தான்.

ஆனால், அந்த சிந்தை எவ்வாறு இருக்க வேண்டும்?

அது தெளிந்த சிந்தையாக இருக்க வேண்டும்.

திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்திருக்கும்பொழுது அந்தச் சிந்தையில் இறைவன் வெளிப்படுவான். அதுவே உயர்ந்த தியான நிலையாகும். மோன சமாதியுமாகும். பேரின்பம் சுரக்கும் அனுபவ நிலையாகும்.

"உரையற்றது ஒன்றை உணரைசெய்யும் ஊமர்காள்
கரையற்றது ஒன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவோர்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே". – (திருமந்திரம் – 2955)

இறைவனைப் பற்றிய அவனது வைபவங்களை யாருமே வெறும் வார்த்தைகளால் கூறி புரிய வைத்துவிட முடியாது.

அவன் வாக்குக்கும், மனதிற்கும் அப்பாற்பட்டவன். அப்படி அவனைப் பற்றி மற்றவர்களுக்கு புரிய வைக்க முயற்சிக்கின்றவர்களைப் பார்த்து, இவர்கள் ஊமைகள் என்கின்றார். மேலும், கரையே இல்லாத ஒன்றைக் கரைக்காண முயற்சிப்பது முறையாகுமா? என்கின்றார்.


அப்படியானால், இறைவனை எப்படித்தான் அறிவது?

அதற்கு ஒரேவழி எப்படி கலங்கமில்லாத நீரின் ஆழத்தின் அடியில் இருப்பதை நம்மால் தெளிவாகப் பார்க்க முடியுமோ? அப்படி, கலங்கமில்லாத உள்ளத்தின் உள்ளே இறைவன் இருப்பதை எளிதாகப் பார்க்க முடியும் என்கின்றார். அதாவது, துய்மையான மனம் யாருக்கு இருக்கின்றதோ? அவர்கள் உள்ளத்திலே இறைவன் பிரகாசிப்பான் என்கின்றார்.

அந்த நிலை மனமற்ற தூய அறிவு நிலை. அதுவே இறையனுபூதி. அதுவே பரமானந்தம். அதுவே முக்தி.

ஓம் தத் ஸத்!

# அனைத்தையும் அறியும் அறிவு!



ப்ரக்ஞன்